THE TAMILIAN'S FRIEND

I

The Journal of the Tamilian Education Society.

தமிழர் நேசன்

ACC. NO 2561.

தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை.

11-117
228

"தொட்டனைத் தூறு மணற் கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு."—திருக்குறள்.



தொகுதி

VI

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

[காப்பிரைட்.

தமிழர் நேசன்

ஆறுவது (1922—1923) தொகுதியின்

பொருள் அடக்கம்.

விஷயம். பக்கம்

1. விசேஷ நிருபங்கள்:—

இறையனூர் அகப்பொருள்—ஸ்ரீமான் K. சுப்பிரமணிய பிள்ளை, M. A., M. L. ... 1

தமிழின் உற்பத்தி—ஸ்ரீமான் R. ஸ்வாமிநாத ஐயர், (பக்கங்கள் தனியாக இலக்கமிடப்பட்டிருக்கின்றன) 1-72

மணிமேகலை துறவு—(நாடகம்)—ஸ்ரீமான் A. மாதவய்யா, B. A. (பக்கங்கள் தனியாக இலக்கமிடப்பட்டிருக்கின்றன) ... 1-16

புறநானூற்று ஆராய்ச்சி—ஸ்ரீமான் R. ரங்காசாரியார், M. A. L. T. (பக்கங்கள் தனியாக இலக்கமிடப்பட்டிருக்கின்றன) ... 1-8

புதுவிதப் பள்ளிக்கூடங்கள்—ஸ்ரீமான் V. நாராயண ஐயர், M. A. M L. 197, 201, 230

2. பௌதிக சாஸ்திரம்

வாயுமண்டலம்—ஸ்ரீமான் K. C. வீரராகவ ஐயர், M. A., L. T., F. C. S. ... 178

மழை பெய்யச் செய்தல்—அ. ... 31

3. தாவர நூல்—(படங்களுடன்)

இரவு காக்கும் குமுதம்:—ஸ்ரீமான் K. C. வீரராகவ ஐயர், M A., L. T., F. C. S. 33, 74

பேரன்கள்:—ஸ்ரீமான் M. S. ஸபேச ஐயர், M. A. 66

விஷயம். பக்கம்

பூக்களை யுடைய செடிகளினம் ஷை 161
செடிகளின் சூக்ஷ்ம உள்ளமைப்பு ஷை 209

4. வைத்திய சாஸ்திரமும் சுகாதாரமும்:—

உடையும் உடலும்:—ஸ்ரீமான் P. N. *அப்புஸ்வாமி*, B. A., B. L. ... 7
அந்த ஈயைக்கொல்லு:—ஸ்ரீமான் V. P. *சுப்பிரமணிய முதலியார்* G. B. V. C. 55
சரீரமும் அதன் ஆரோக்கியமும்—ஸ்ரீமான் N. R. *ரகுநாதாசாரியார்*, M.A., L.T. 147
மக்குக் குழந்தைகள்:—ஸ்ரீமான் P. N. *அப்புஸ்வாமி*, B. A., B. L. ... 170
குளிர்க் காய்ச்சல்:— ஷை 205
வாக்சீன் இவேதைப்பற்றிய புதிய கொள்கை:— ஷை 225
சாப்பிவேதைப்பற்றி:— ஷை 241
உனக்கு உடம்பு என்ன ? ஷை 257

5. சோதிட சாஸ்திரம்:—

கிரக ஓரை—ஸ்ரீமான் S. K. *பார்த்தஸாரதி*, B. A., B. L. 161

6. சட்டநூல்:—

புராதன நியாயஸ்தலங்களும் அவைகளின் நடவடிக்கைகளும்—ஸ்ரீமான் S. V. *கோபால கிருஷ்ண ஐயர்*, M. A., M. L. 122

7. கூட்டுறவு இயக்கம்:—

ஐக்கிய நாணயச் சங்கமும் அதன் கடமையும்—ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராம ஐயர், 19

8. ஜீவசரிதைகள்:—

ஹென்ரி டேவிட் தோரோ—ஸ்ரீமான் T. R. *ராஜகோபால ஐயர்*, ... 81
தாயுமானவர்:— ஷை 223, 237, 249, 268

தமிழ்ச் செல்வம்:—அ. மா. ... 29, 59, 155

விஷயம். பக்கம்

10. கவிகள் :—

தொழில் வீர—ஸ்ரீமான் B. ஆதிமூர்த்தி 52

கூட்டுறவு முறையின் குணம்—ஸ்ரீமான் ஊ. சா. வெங்கடராம ஐயர் ... 27

வாய்க்கால்—ஸ்ரீமான் பிரொபசர் P. சுந்தரம் பிள்ளை, M. A. ... ...

11. கதைகள்:—

சித்திரக் குள்ளன் கதை—ஸ்ரீமான் R. ரங்கா சாரியார், M. A. 264

டான் க்விக்சாட்டின் விசித்திரானுபவங்கள் ஷை

கிரேக்கநாட்டுக் கதைகள்— ... 97

தில்லைக் கோவிந்தன் (மொழி பெயர்ப்பு) 12, 48

12. பொது விஷயங்கள் :—

மக்கட் பகுப்பு—ஸ்ரீமான் ஊ. சா. வெங்கடராம ஐயர் 44

ஞானமும் அருளும் ஊழும்—ஸ்ரீமான் T. R. ராஜகோபல ஐயர் 106

எண்—ஸ்ரீமான் V. நாராயண ஐயர், M. A., M. L. 129

முப்பொருளாராய்ச்சி—ஸ்ரீமான் ஊ. சா. வெங்கடராமய்யர். 138

செல்வத்தின் வறுமை—ஸ்ரீமான் K. C. வீரராகவ ஐயர், M. A., L. T., F. C. S. 193

தூரதிருஷ்டிக் கண்ணாடி—ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி, B. A., B. L. ... 273

13. குறிப்புக்கள்:— 62, 94, 160

14. தமிழ்மொழிகள்:— 64

15. மதிப்புரை:— 191, 236

65

தமிழர் நேசன்

(தமிழர் கல்விச்சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு — திருக்குறள்.

தொகுதி VI. { துந்துபி௵ சித்திரை௴ } பகுதி 1.

இறையனார் அகப்பொருள்
Irayanar Ahapporul

சென்னைச் சட்ட கலாசாலையில் ஆசிரியராயிருக்கும்
ஸ்ரீமான் K. சுப்பிரமணியம், M. A., M. L.,

நமது சங்கத்தின் ஆண்டு நிறைவிழாவன்று செய்த
பிரசங்கத்தின் விஷயத்தைத் தொகுத்தும் விளக்கியும்
எழுதியனுப்பியது.

1. தோற்றுவாய்

இந்நூல் திருவாலவாயில் வீற்றிராநின்ற சிவபெருமான் அருளிய அகப்பொருள் நூல் என்றும் கூறப்படும். இறையனார் என்னுஞ் சொல், எங்கும் நிறைந்த பரம்பொருள் என்னுங் கருத்திலே சிவபெருமானைக் குறிப்பதாயிற்று. அது தங்குதல் என்னும் பொருளுடைய இறு என்னும் பகுதியடியாய்ப் பிறந்ததென்று சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்குநல்லார் மொழிந்துள்ளார். கடைச் சங்கத்துப் புலவர் இறையோன், இறைவன் என்ற சொற்களைச் சிவபிரானையே சுட்டுவதற்கு வழங்கிவந்தனர்.

அகப்பொருளாவது மாந்தரது உள்ளத்தே நிகழ்வது. பண்டைத் தமிழறிஞர் மக்களுடைய உள்ளமு முயிரும் சார்ந்துள்ளவற்றை அகப்பொருளென்றும், உடலும் உலக மும் பற்றி நிகழ்வனவற்றைப் புறப்பொருள் என்றும் வகுத் துணர்ந்தனர். உள்ளத்தில் நிகழ்வனவற்றை அறிவின் பகுதி யெனவும், (Intellectual) உணர்வின் பகுதியெனவும் (Emtional) ஆயப்படும். அவற்றுள் முன்னையது உயிர்க்கு உணவினைக் காட்டும் விளக்குப் போல்வது; பின்னையது அவ் வுணவின் சுவைபோல்வது. உணர்ச்சியானது அறிவினும் நுட்பமானதால் அதனை அறிவினுஞ் சிறந்த அகப்பொருள் என்ப.

அவ்வுணர்ச்சி தானும் பலவகைப்படும். அப்பலவகை உணர்ச்சிகளுள்ளும் சிறந்தனவாய்ப் புறத்தே தோன்றும் செயல்களால் எளிதிற் பிறர் அறியக் கூடியனவாய் உள்ளன சில. அவையாவன:—

1 நகை, (=சிரிப்பு,) 2 அழுகை, 3 இழிவரல் (=தாழுதல் தாழ்மை யுணர்தல்,) 4 மருட்கை (=மயங்குதல், வியப்பு) 5 அச்சம், 6 பெருமிதம், (=உயர்தல், தன் உயர்வுணர்த்தல்,) 7 வெகுளி (=சினம், வெறுப்பு,) 8 உவகை (=விரும்புதல்)

என்னும் எண்வகைச் செயற் குறிப்பிற்கும் ஊற்றாய் நின்ற உணர்ச்சிகளே. அரியபொருள் அமைப்பும், அழகிய சொல் நயமும் அமைந்துள்ள தமது இனிய பாட்டுக்கள் வாயிலாக நல்லிசைப்புலவர்கள் நமது உள்ளத்தே இந்த எட் டுவகை உணர்ச்சிகளையும் அவற்றின் சார்பாய உணர்ச்சிகளை யும் எழுப்பிய காலை, அவை எண்வகைச் சுவையெனப்பெ யர்பெறும். அவ்வெண்சுவைகளுள் ஒன்றனையாவது எழுப் பாத பாட்டினை நல்லோர் பா நயமற்றதென ஒதுக்குவர்.

இந்த எண்வகை உணர்வினுள்ளும் மிகச் சிறந்தது யாதெனில், உவகைச்செயலுக்கு முதலாகிய அன்பு என்பதே. அது எல்லா உயிர்களேயும் ஒன்றோடொன்று இசைவிப்பதிலும் அவ்வுயிர்கள் யாவற்றையும் முதல்வனோடு இணக்கஞ் செய்வதிலும் இணையற்ற பெருமை வாய்ந்ததாகலின், அதனையே அகப்பொருள்களுட் சிறந்த அகப்பொருள் என்ப.

அந்த அன்புதானும் கடவுட்கும் உயிர்க்கும் உளதாய தொடர்பெனவும், உயிர்கள் இறைவன் பாற்செலுத்தும் உள்ள நிகழ்ச்சி யெனவும், மனிதருள் ஒருவர் பிறிதொருவர் பால் பெறும் நண்பெனவும் ஒருவனோடு ஒருத்தியிடை நிகழுங்காதல் எனவும் பலவகைப்பட்டு நிற்கும். இவற்றுள் காதல்வடிவான அன்பானது இந்த உலகத்திலே மக்களாய்ப் பிறந்தோர் உடலும் உள்ளமும் ஒருங்கே நிரம்பிய இன்பம் எய்துவதற்கு அடிப்படையாய்ப் பலபிறப்புக்களிலே வளர்ந்தும், மறைந்தும, வெளிப்பட்டும் நிலவும்.

உருவிலும் திருவிலும், குலத்திலும் நலத்திலும் அறிவிலும் அவாவிலும் செறிவு மிக்க தலைவனும் தலைவியும் தனியிடத்திலே வேட்கை வயத்தராய் எதிர்ப் பட்டுக் கூடுதலாகிய இன்ப வாழக்கையிலே நிகழும் அன்பானது புறத்தார்க்கு எளிதாக வெளிப்படாது நிற்றலால், அதனையே யாவற்றுள்ளும் சிறந்த அகப் பொருள் என்ப.

இதுவரை கூறியதனுற் பெற்ற பொருள் யாதெனில், அறிவினும் உணர்ச்சி சிறந்த அகப் பொருள்; உணர்ச்சிகள் பலவற்றுள்ளும் சிறந்த எட்டுவகை வுணர்வு, உணர்ச்சியுட் சிறந்த அகப் பொருள், அந்த எண்வகையுள்ளும் சிறந்த அகப்பொருள் அன்பு; அந்த அன்பின் பலவகையுள்ளும் சிறந்த அகப் பொருள் காதலாகிய அன்பு. என்பதே. இந்தஅன்பால் விளைவது நிரம்பிய சிற்றின்பமே.

இனி இந்த அன்பு தலைவனுக்கும் தலைவிக்கும் நிகழ்வதொப்ப, கடவுளிற்கும் உயிர்க்கும் நிகழ்வதனால் எழுகின்ற இன்பம் எக்காலத்தும் நிலை பெற்றதாய் அறிவுவடிவாய உயிர்க்குப் பெரிதும் இயைபுடையதாய் இருத்தலின், அதனைப் பேரின்பமென்பர். அத்தன்மைத் தாய பேரின்பத்திற்குக் காரணமாகிய அன்பே மெய்ம்மையான அகப் பொருளெனப்படும்.

தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள அன்பு காரணமாக நிகழும் ஒழுக்கமானது, மணத்திற்கு முன் நிகழுங்காலைக் களவு எனவும் அதற்குப்பின் நிகழுங் காலைக் கற்பெனவும் பெயர்பெறும். அந்த இருதிற வாழ்க்கை யினையும் நானூற்றிற்கு மேற்பட்ட பல துறைகளாகப் பகுத்து எண்சுவையும் பத்தழகும் பொருந்தும் வண்ணம் தொகுத்தும் விரித்தும் அணிபெறக் கூறும் பாட்டு அகப்பொருட் பாட்டாகும். அது கோவை முதலிய தொடர் நிலையுட் சிறப்பாகவரும். அகப்பொருட்பாட்டின் அமைப்பும் பொருளும் இன்னவகையாக இருத்தல் வேண்டுமென்று கூறும்நூல், அகப் பொருள் இலக்கணம் என்று பெயர்பெறும். இறையனார் அகப்பொருள் என்பது அவ் அகப்பொருள் இயல்நூலுள் ஒன்று. இது மிகவும் சுருங்கிய தொகை நூலாக விளங்குகின்றது.

மேற்கூறிய அகப்பொருட் பாட்டின் துறைகளை உருவகப் பொருளிலே, உண்மை நூற்கருத்துக்களை அழகு மிகவும் மறைவாகவும் உணர்த்துவான் பயன்படுத்துவதை பேரறிவாளராய மணிவாசகப் பெருமான் இயற்றியருளிய திருச்சிற்றம்பலக் கோவையாரிலே விரிவாகக் காணலாம். அது நானூறு பாக்கள் கொண்டது. அதனை வேதாந்த ஞானமுடையார், வேதாந்த முடிவுகூறும் நூலென்றும் சிவயோக சிவஞானமுடையார் ஆகமங்களின் மூலமென்

றும், காமுகர் காம நன்னூலென்றும், வழக்கு நூல்வல்லார், சிறந்த தருக்க நவமிக்கதென்றும், செய்யுள்வல்ல புலவர்கள், சிறந்த பாநலமிக்க பனுவலென்றுங் கூறுவரென, ஒருவர் சிறப்புப்பாயிரங் கூறியுள்ளார். அதுவருமாறு:—

"ஆரணங்கா ணென்பரந்தணர் யோகியராகமத்தின்
காரணங்காணென்பர் காமுகர் காமநன்னூலதென்ப
ஏரணங்காணென்ப ரெண்ணரெழுத் தென்பரின்புலவோர்
சீரணங்காய சிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே."

நமது திருஞான சம்பந்தப்பெருமான் திருவாய் மலர்ந்தருளிய முதற்றிருப்பதிகத்திலே சிவபெருமானை 'உள்ளங் கவர்கள்வன்' என்றனர். தம்மைத் தலைவியாகக் கூறியது 'இறைகலந்த இனவெள்வளை சோர என் உள்ளங்கவர்கள் வன்'. என்ற அடியிற்காண்க. (= வரிகள் சேர்ந்த வெள்ளிய வளையல் நழுவும் வண்ணம் எனது உள்ளத்தைக் கவர்ந்த கள்வன்.)

இன்னும் இவர் அருளிச்செய்த கிளிவிடுதூது, வண்டு விடுதூது இவைகள் அடங்கியதேவாரப் பதிகம் மிகவும் நயமாக இருக்கும். உதாரணம்.

"சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளம்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் திருநாம மெனக்கொருகாற் பேசாயே,
வண்டரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்டரங்க இசைபாடும் அளியரசே யொளிர்மதியத்
துண்டரங்கப் பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க் கென்னிலைமை பரிந்தொருகாற் பகராயே."

இவ்வாறே திருநாவுக்கரச சுவாமிகள் (=அப்பர் சுவாமிகள் குயிலினங்களை விளித்துள்ளார்.)

"சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பனென் புதுநலமுண் டிகழ்வானோ"

இங்ஙனமே, ஆழ்வார்களுட் சிறந்த நம்மாழ்வாரும் ஆண்டாளும் அகப்பொருட் துறைகளை மிகுதியும் எடுத்தாண்டுள்ளார். இங்ஙனம் தத்துவக்கருத்துக்களமைவுறக் கூறிய அகப்பொருட் செய்யுள்கள் தமிழிலே எண்ணிறந்தன. அவை விரிப்பிற் பெருகும்.

இனி, அகப்பொருளுக்குச் சார்பாகிய நிலம், பொழுது, கருப்பொருள் முதலிய புறப் பொருளின் றன்மையைச் சுருங்கக் கூறிப்பின் எடுத்துக் கொண்ட நூலி னியல்பினை யாராய்வாம். அது பின்வரும்.

(தொடரும்.)

நோயற்ற வாழ்வு

உடையும் உடலும்

Clothes and the man.

லண்டன் மா நகரில் பிரசுரமாகும் டைம்ஸ் பத்திரிகையின் விசேஷவைத்திய சாஸ்திர நிருபரின் வியாசத்தினின்றும் ஸ்ரீமான் P. N. அப்பஸ்வாமி ஐயர் B. A., B. L. தொகுத்தெழுதியது.

நோயற்ற நன்னிலையில் இருந்து வருபவர் பொதுவாகத் தமது உடையில் மிக்க கவனம் செலுத்தி வருகின்றனர் என்பதை எளிதில் யாரும் அறிந்துகொள்ளலாம். ஆரோக்கியமாய் இருக்க விரும்புவோர் அனைவரும்—அவ்வாறு இருக்க விரும்பாதார் யார்!— தமது உடையின் மீது கவனத்தைச் செலுத்தி வரவேண்டும். 'உடைதான் ஆள்' என்று கூறும் மொழியின் உண்மை என்ன வாயினும் உடையானது ஒருவனுடைய உடலுக்குச் சுகத்தையோ துன்பத்தையோ தந்து அவன் செய்யும் வேலையைக் கூட்டவோ குறைக்கவோ செய்கிறது என்பதில் சந்தேகமில்லை.

உடை விஷயத்தில் பொதுவாகக் காணப்படும் பிழை என்ன வெனில், அதிகக் கனமுள்ள, தடித்த, உடைகளை உடுப்பதே. உடலுக்கு அடுத்தாப் போல் கம்பளி (பிளானல்) யினால் செய்யப்பட்ட அங்கிகளைச் சாதாரணமாகப

பிலர் உடுத்து வருகின்றனர். இவ்வாறு செய்வது நல்ல தல்ல வென்பதும் பஞ்சினால் செய்யப்பட்ட துணிச் சட்டை களை உடலுக்கு அடுத்தாப் போல் போட்டுக் கொள்ளுவது இதைவிட மிகவும் மேலான தென்பதும் என்னுடைய தீர்ந்த கொள்கை*. உடலுக்கு அடுத்தாப்போல் உள்சட்டை உடுப் பதின் நோக்கம் உடலின் சூட்டை வெளிச் செல்லாது தடுப் பது மட்டுமல்ல. உடலினின்று தோலின் நுண்ணிய துவா ரங்களின் வழியாக வெளியே தள்ளப்படும் வியர்வையை ஒற்றி எடுப்பது உள் உடை உடுப்பதின் மற்றொரு பிரயோ சனம். பிந்திக்கூறிய நோக்கம் தான் முந்தியதினும் முக்கி யமானது. உடலின் மேல் போர்வையாகும் தோலானது சுறு சுறுப்பாய் வேலை செய்து வரவேண்டுமாயின் அதன் மீது ஊறிவரும் வியர்வையானது உடனுக்குடனே அகற்றப்பட வேண்டும்; மிகவும் முக்கியமான இந்த உறுப்பின் மீது காற்று நன்கு ஆடிவரவேண்டும்.

கம்பளித் துணி இவ்விரு காரியங்களையும் செய்ய வல்ல தல்ல. கம்பளி ஈரத்தை ஒற்றாது. சிறிது ஜலத் தைக் கம்பளியால் ஒற்றி யெடுக்க முயன்றால் இதன் உண்மை புலப்படும். கம்பளியின் இழைக்கு நீரை ஒற்றும் குணம் கிடையாது. அதனால் தான் கம்பளி உள்சட்டை யை உடுத்திருப்போர் சிறிது உடல்வேலை செய்தவுடன் மேலெல்லாம் கசகச வென்றிருக்கிற தென்று கூறுகின்றனர். உடலில் உண்டாகும் வியர்வையானது ஒற்றி யெடுக்கப்படு கிறதில்லை. அது தோலின் மீதே படிந்து விடுகிறது. மேலும் சட்டைத்துணியின் இழைகளுக்கு நடுவேயுள்ள இடைகள்

*பனி உறைந்து குளிர் நடுக்கும் இங்கிலாந்தில் கூடக் கம்பளிச் சட்டையை உடலுக்கு அடுத்தாப்போல் அணிவது உசிதமல்லவெனில் இந்தியாவில் அவ்வாறு செய்வது பெரும் பிழையே யாகும்—ப-ர்.

அடைத்துத் தோலுக்குக் காற்றோட்டமும் இல்லாது போய் விடுகிறது. அதனால் தோல் சூடுண்டு, ஈரமாய்க் காற்றற்று இருக்கிறது. தோலின் சூடு ஆற ஆறத் தங்கிய ஈரம் பொறுக்க முடியாத கசகசப்பைத் தருகிறது.

இவ்வாறின்றிப் பஞ்சிழையால் செய்த துணிச்சட்டையைத் தோலின் மீது அணிந்துவரும் ஒருவன் இவ்வளவு கஷ்டப் படுவதில்லை. அவன் சௌக்கியத்தையே பெறுகிறான். பஞ்சுத்துணி ஈரத்தை நன்றாக ஒற்றியெடுக்கவல்லது. ஆதலால் அவனது வியர்வையானது உடனுக்குடனே அகற்றப் படுகிறது. தோலும் அதிக ஈரமின்றி உலர்ந்து விடுகிறது. மேலும் துணியிழைகளின் இடைவழியாகக் காற்றோடி உலவி அவனது தோலின் மீது பட்டு வருகிறது ஆதலால் அவனது தோலானது அளவுக்கு மிஞ்சிய சூடற்று, தொந்திரவைத் தரும் ஈரமற்றுத் தனது வேலையைச் செவ்வனே செய்துவர முடிகிறது. அவனும் சௌக்கிய உணர்ச்சியைப் பெறுகிறான்.

நாம் மேலே கூறியது கோடைகாலத்தைப் பற்றி மட்டுமல்ல, குளிர் காலத்தையும் சேர்த்துத்தான். குளிர் காலத்தில் அவசியம் போலப் பஞ்சுத்துணியின் மீது கம்பளித் துணிச் சட்டைகளை அணிந்து கொள்ளலாம். இப்படி அணிவது தான் கம்பளியைக் கிரமமாக உபயோகிப்பது.

உடலிலுள்ள உறுப்புக்களுள் தோலானது, மிகவும் முக்கியமான ஒரு உறுப்பு என்னும் கொள்கையை அடிப் படையாகக் கொண்டவை உடையைப்பற்றி மேற் கூறியவை. தோலின் வேலைகள் அனேகம். உடலின் சூட்டைப் பாதுகாத்து ஒரே அளவினதாய் இருக்கச் செய்வதும், உடலின் உட்புறமுள்ள பலஉறுப்புக்களைத் தீங்கு அணுகாது காத்து வருவதும், பலவகை உணர்ச்சிகளை உடனுக்குடனே மூளைக்கு அறிவித்து வருவதும் அதன் வேலைகளிற் சில.

தோலானது சூட்டின் அளவைப் பாதுகாத்துவருவது இரண்டு விஷயங்களை ஒட்டியிருக்கிறது. அவை யாவெனில் தோலின் அண்டையிலுள்ள இரத்தத்தின் அளவு ஒன்று தோலின்மீதிருநது உலர்ந்துவரும் நீரின் அளவு மற்றொன்று இவ்விரண்டையும் உடையானது பாதிக்கவல்லது. தடித்த உடையை உடுத்திருந்தால் தோலைக் குளிரச் செய்யும் பொருட்டு இரத்தம் அதிகமாகத் தோலின் பக்கமாகச் செலுத்தப் படுகிறது, வியர்வையும் அதிகமாய் உண்டாகிறது. மெல்லிய உடை உடுத்தால் தோலுக்கு அவ்வளவு இரத்தம் தேவையில்லை, அவ்வளவு ஈரமும் தோலின் மீது உலரவேண்டாம்.

இரத்தம மிகுதியாகத் தோலினிடம் செலுத்தப்பட்டால் மூளைக்குச் சென்று வரும் இரத்தத்தின் அளவு குறைந்துபோகும். சூடு அதிகமாகவுள்ள நாட்களில் அளவுக்கு மிஞ்சிய உடை உடுத்திருப்போரின் மூளையானது சோர்ந்து வேலை சரியாய்ச் செய்யாததற்கு இதுவே முக்கிய காரணமாகும். தோலைக் குளிரச் செய்வதே இவர்களது உடலில் நடக்கவேண்டிய முக்கிய வேலையாய்விடுகிறது. ஆதலால் யோசனைசெய்யப் போதிய சௌகரியம் இவர்களது மூளைக்கு இல்லாது போய்விடுகிறது. மேலும் வியர்வை அதிகமாக உண்டாக்கப்படும்போது, வியர்வையை ஆவியாக எடுத்துச் செல்லக்கூடிய காற்றானது அதின்மீது படமுடியாது போகிறபடியால் வியர்வை எடுபடாமல் உடம்பின் மீது படிந்திருந்து இவர்களுக்கு ஒரு விதக் கசகசப்பை உண்டாக்குகிறது வியர்வை எடுபடாத காரணத்தால் உடம்பு சரியானபடி குளிர்ந்துவருவதும் இல்லை. ஆதலால் மிதமிஞ்சிய உடையை உடுத்தலால் இருவகையாயும் அசௌகரியம் உண்டாகிறது.

இன்னொரு கெடுதலும் இதனால் ஏற்படுகிறது. அஃதென்ன வெனில் உடலின் சூட்டை நடு நிலைமையில் வைக்க

முயலும் தோலின் ஏற்பாடானது—வினைக ஓயாது அள வுக்கு மிஞ்சி உழைக்க நேரிடுவதால்—ஒழுங்கு கெட்டுப் போகிறது. இதனால் தோலின் வேலைகள் சீராக நடத்தப் படாது போகின்றன. இதனால் தான் அதிகமாக உடுத்திக் கொள்ளும் சிலர்—தமது தோலின் வன்மை கெட்டுப்போன தால்—அடிக்கடி சாதாரண இடங்களிலும் கூட "சில் லென்று காற்றடிக்கிறது" என்று கூறக் கேட்கிறோம். இவ ருக்கு எளிதில் ஜலதோஷம் பிடிக்கிறது. இவர்களால் சூடும் தாங்க முடிகிறதில்லை. குளிரும் தாங்க முடிகிறதில்லை.

இதற்கு அடுத்தபடி வியாதி தான். அதிக உடை அணிந்து வருவோருக்கு மெல்லிய தென்றல் ஜன்மப்பகை யாய் விடுகிறது. ஆரோக்கியமுள்ள ஒருவன் சுகமாய்க் காற் றில் உலாவி அனுபவிக்கும்போது இவர் குளிர் கொண்டு நோயுறுகின்றனர்.

உடலின் முக்கிய உறுப்புக்களில் ஒன்றாகும் தோலா னது சீர் குலைந்து போகவே அதை ஒட்டிய மற்ற உறுப்புக் களும் படிப்படியாகச் சீர் கெட்டு வன்மை குன்றி நோய்க்கு எளிதில் இரையாகின்றன.

ஆதலால் காற்றுலாவக் கூடிய மெல்லிய பஞ்சுத்துணி உடையையே தோலுக்கு அடுத்தாப்போல் அணிவது உத் தமம். குளிர் காலத்தில் தேவையிருப்பின் அதற்கு மேலாக கம்பளிச் சட்டையை அணிந்து கொள்ளலாம். தினந்தோறும் உடலின் மீது அணிந்து வரும் துணியை நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்யவேண்டும். இயற்கையில் ஒழுங்காக நடந்து வரும் காரியங்களின் ஒழுங்கை அறிந்து அதை அனு சரித்து வரவேண்டுமேயன்றி அவற்றின் ஒழுங்கைக் கெ டுக்கும் முறைகளைப் பின் பற்றக் கூடாது. இவ்வறிவை அறிந்து கூறுவதே அறிவாளரின் நோக்கமும் கடமையும்.

தில்லைக் கோவிந்தன்.
Thillai Govindan.

பதினெட்டாவது அதிகாரம்

அமைதி தேடிச்சென்ற யாத்திரையைக் குறிப்பது.

பொதுவாய் என் அவநம்பிக்கை யாதொரு பொல்லாப்பும் பிரயத்தனமும் அற்று இருந்தபோதிலும், சிலவேளை என் செய்கைகளில் அது முன் வந்துநிற்கும். என் நண்பர்கள் கூட எப்பொழுதாவது ஒரு பெரிய கோவிலுக்குப் போனாலும், விளையாட்டாகத் திருநாள் உத்சவங்களுக்குப் போனாலும் அங்கே திவ்ய விக்கிரகத்தை ஓர் அறிகுறியாகக்கொண்டு இருக்கும் அநுபவஸ்துவைப் போற்றினவராய் என்னைச் சூழ்ந்து எல்லாரும் தியானத்தில் ஆழ்ந்திருக்க, திடீரென இவையெல்லாம் என்ன அதிசயமான மூடத்தனம் என்று என் மனத்தில் தோன்றவே, உட்சென்று அசங்கியமாய்ப் பயங்கரமாய் தோன்றும் விக்கிரகத்தை இழுத்தெறிந்து சுக்கலாய் உடைத்து, அவர் பூசனை நிஷ்பிரயோசனமானது என்று அவர்களுக்கு விளக்கவேண்டுமென்ற அடக்க முடியாத ஒருவித ஆவேசம் உண்டாகும். அப்படிப் பைத்தியம் பிடிக்கும்போது பரபரப்புடன் கோவிலை விட்டோடி, எவ்வளவு தூரத்தில் இருந்தால் சும்மா இருக்க முடியுமோ அவ்வளவு தூரத்திற்கு அப்பால் போய்விடுவேன். ஆனால் லௌகிக மதம் போதாமல், ஸ்பென்ஸர் புத்திகொண்டு ருசுப்பித்த "அக்ஞானவாத" த்திலும் என் மனத்திற்கு அதிருப்தி அதிகரிக்கவே, எல்லாவற்றையும் உடைத்தெறியும்

புத்திசாதுர்யம் குறைந்தவனாய், பக்தி அதிகம் வாய்ந்தவனாயிருந்தேனா? என்று வருந்த ஆரம்பித்தேன். தாயுமானவ முனிவரின் பின்வரும் வார்த்தைகளை அடிக்கடி நினைந்து கொண்டேன்.

“கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்.
கற்று மறிவில்லாதவென்
கர்மத்தை யென்சொல்கேன் மதியையென்சொல்லுகேன்
கைவல்யஞான நீதி
நல்லோருரைக்கிலோகர்ம முக்கியமென்று நாட்டுவேன்
கர்மமொருவ
னாட்டிலோ பழைய ஞான முக்கியமென்று நவிலுவேன்
வடமொழியிலே
வல்லாளொருத்தன் வரவும் திராவிடத்திலே வந்ததா
விவகரிப்பேன்
வல்லதமிழறிஞர்வரினங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிது புகல்வேன்,
வெல்லாம லெவரையு மருட்டிவிட வகைவந்த
வித்தையென் முத்திதருமோ
வேதாந்த சித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே!

இவ்விதம் ஓர் அதிசயமான யாத்திரைசெய்ய நான் புறப்படுமுன், எனக்கு உபயோகப்படக் கூடிய புத்திமதி சொல்லக்கூடியவர்கள் என்று நான் எண்ணின சில கனவான்களுக்கு என் மனம் உழலுவதையும் எனக்கு ஏற்பட்ட அதிருப்தியையும் பற்றி எழுதியிருந்தேன். நான் முதல் முதல் தங்கிய பட்டணத்தில் அவர்கள் எழுதிய பதில்கள் கிடைத்தன. ஒருவர் கிறிஸ்து வேதங்களையும் “தாமஸ் அகெம்பிஸ்” வின் பேர்பெற்ற புஸ்தகத்தையும் வாசிக்கச் சொன்னார். வேறு இருவர் “பகவத்கீதை” யை நன்கு படிப்

பது மட்டுமே என் மனத்தைச் சாந்தப்படுத்து மென்றார்கள். என் சிற்றப்பனே, தூக்கத்திலும் தேகப்பயிற்சியிலும் அதிகப்பொழுது செலவிட்டு, 'வேண்டுமானல் வைத்திய நிபுணர்களின் சிகிச்சைப்படி நடந்து, மறுபடி "இங்கர் ஸால்". எழுதிய புஸ்தகங்களை நன்றாய் வாசிப்பதே நலம் என்று சொன்னார். அவரவர் மதப்படி நடக்கவேண்டுமென்று அவர்கள் எல்லாரும் ஒன்றுபடச் சொன்னதிலிருந்து ஒன்று விளங்கிற்று. 'மதம், தான் இதற்கு மருந்து, என்பது.' அப்போது தான் உலகத்திலுள்ள பெரியமதங்களில் ஏதைப் பற்றியாயினும் நான் அறிந்தது எவ்வளவு சொற்பம் என்பது புலப்பட்டது. உடனே நான் நேராகச் சென்னைப்பட்டணத்திற்குச்சென்று அங்கே ஒதுங்கின தான ஓர் இடத்தில் சௌகரியமான ஒரு சிறு வசதி திட்டம் செய்துகொண்டு, அங்கே உலகத்திற் பெரிய நான்கு மதங்களைப்பற்றியுமுள்ள புஸ்தகங்களில் மேலானவற்றை வாங்கி ஆழ்ந்த மனத்துடன் வாசிக்க ஆரம்பித்தேன். உண்மையான பக்தனும், கவிகள் போலவே, தானகவே பிறக்கிறான் அல்லாமல், எவ்விதச் செயற்கையாலும் ஒருவன் பக்தன் ஆகமாட்டான் என்று திடமாய் நம்புகிறேன். நான் வாசித்த புஸ்தகங்களெல்லாம் என்னை அணுவளவும் அதிகபக்தனுகவோ நம்பிக்கைகொள்பவனுகவோ ஆக்கவில்லை. என்றாலும் படித்து முடிந்ததும், என் மனது அநேகமாய் சாந்தியை அடைந்தது. சகல மதங்களிலும் ஒரே நீதிமார்க்கம் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. அவைகளெல்லாம் ஒரே விதமாய்த் திரைக்குப் பின்னிருக்கும் அறியவொண்ணு அதிசயத்தை மறுக்காது ஒப்புக்கொண்டன. ஆனல் அந்த அதிசயத்தை அவதாரங்கள், அல்லது தேவர் போன்ற மனிதர் மூலமாய் நமக்கு வெளிப்படுத்துவதில் வித்தியாசங்கள் ஏற்பட்டன. கடைசியிலுண்டான மதமானதால் முன்னுள்ள மதங்களைப் பயன்

படச்செய்து மேலானதாக இருக்கவேண்டியதான மகம்மதிய மதம் என் மனத்தைக்கவரவில்லை. பௌத்தமதம் அதிகம் சிறந்ததாயும் ஜீவகாருண்யம் மிகுந்ததாயும் எனக்குத்தோன் றிற்று. அதைப்போல் மனிதனின் தயை தாக்ஷிண்ணியம் முதலிய குணங்களைக்குறித்துக் காட்டும் சக்திவாய்ந்ததான கிறிஸ்தவ மதத்தையும், முக்கியமாய் கிறிஸ்து மலை மீது நின்று அருளிய உபந்நியாஸத்தையும், அதற்கப்புறம் வைப் பேன். ஆனாலும் அந்த மதத்தைச்சேர்ந்தவர் விசாலமான நோக்கத்துடன் கிறிஸ்துவின் வார்த்தைகளைப் பொருட் படுத்தாததாலும், புத்தி செலுத்திப் பகுத்தறியாமல் ஒரே யடியாய் எல்லாவார்த்தைகளையும் சுருதியாகக் கொள்ளுவதா லும், அந்த மதம் முன்னுக்கு வராமலிருக்கின்றது. மேலும், பௌத்தமதம் போலவே இதிலும், உலகத்தில் ஜயமடைந்து சுகப்படவேண்டு மென்று நினைக்கும் மனிதன், அந்த மதத் தின் நீதி வாக்கியங்களை அப்படியே அநுசரிப்பதில் பிரயோ சனமில்லை. அப்படியே முன்னுக்கு வரவேண்டு மென்பவன் ஒருநாளும் அந்த மதத்தின் நீதியை பின் பற்றுவதில் பிரயோ சனமில்லை. ஆகையால் தான், பகையோரிடமும் அன்பு வேண்டும் என்று கிறிஸ்து தன் சீடர்களுக்கு உபதேசித்து, வலது கன்னத்தில் ஒருவர் அடித்தால் கோபியாது இடது கன்னத்தையும் காட்டவேண்டு மென்று சொல்லியிருக்க, உலகில் மிகவும் உயர்தர கிறிஸ்தவ நாடு என்ற தேசத்தின் ஜாதிய கீதத்திலே, கடவுளையே எழுந்திருந்து எங்கள் பகையோரை ஓட்டுவித்து அவர்களை நாசம் செய்யவேண்டு மென்று பிரார்த்திப்பதும், சைன்யங்களைப் பொசுக்கி நாசத் தையும் மரணத்தையும் கொடுக்கும் கொடுங்கருவிகளைப் பழுதுபோக்கி நன்றாக்குவதில், எல்லா கிறிஸ்தவ தேசங் களும் ஒன்றோடொன்று போட்டி போடுவதுமா யிருக்கிறது.

சட்டமோ ஜனசம்மதமோ வழிகாட்டாத இடங்களில் ஜனங்களுக்கு நல்வழி காட்டுவதிலும், சட்டத்திற்கும் ஜன சம்மதத்திற்கும் அநுகுணமாய் அவைகளுக்கும் பலம் கொடுத்து உதவுவதிலும் மட்டுமே, ஜாதியம் தங்கள் தலையிட்டுக் கொள்ளவேண்டும் போலும். சுத்த 'மதம்' ஆகிய மேலான விஷயங்களில் ஒவ்வொருவனையும் சுயேச்சையாய் அவனுடைய மனப்போக்கின்படியும் மனோபீஷ்டப்படியும் நடந்துகொள்ள விட்டுவிடவேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஹிந்து மதத்தைப்பற்றி நான் படிக்கப்படிக்க, அது எந்த ஸ்திதியிலிருக்கின்றது என்று நான் என்னைச்சுற்றிப் பார்த்த போதும், எவ்வளவு வித்தியாசங்களுக்கு இடம் கொடுத்து அவைகளையெல்லாம் தன்னில் அடக்கிக்கொண்டிருக்கின்றது என்பதைக்காண ஆச்சரியமாயிருந்தது. காட்டுப் பிராண்டி முதல் பரமயோகி வரைக்குமுள்ள சகலவிதமான மனிதப் பிறவிகளுக்கும் ஏற்பாடுகள் அமைக்கப்பட்டது போலிருந்தது. எதற்கு வேண்டினும் அதற்குச் சரியான படிகள் வாய்ந்த ஏணிபோலிருந்தது. படிப்படியாய் மிகத் தாழ்ந்த உபாசனைகள் முதல் தொடங்கி பரமசிரேஷ்டமாய் நுண்ணறிவே எட்டும் தத்துவங்கள்வரை மேல் செல்லுகின்றது. வாஸ்தவத்தில், ஒரு காலத்தில், மனிதனோ தேவனோ ஒருவனால் உபந்நியசித்து விளக்கப்பட்ட ஒரு மதம் அல்ல இது. எத்தனையோ நூற்றாண்டுகளாய்த் தேய்ந்தும் வளர்ந்தும் விருத்தியடைந்து வருகிற பெரியதோர் புராதன நாகரிகத்தின் சின்னங்கள் அநேகம் பொருந்தியது. இந்தப் பிதிரை அவிழ்த்து அறியமுடியாப் பரம்பொருளின் சுபாவத்தைக்காணவேண்டி நான் முயலவில்லை. எனக்கு வேண்டியதெல்லாம் உலகவாழ்க்கையில் எனக்கு வழிகாட்ட ஒரு கொள்கை, என் வாழ்நாளாகிய கப்பலைச்சரிவரச்செலுத்து-

வற்கு என் புத்திக்கு விகாரமாய் தோன்றாத சுக்கான் ஒன்று; திகைக்கச்செய்து மனத்தைக் கலக்கும் புஸ்தகமாகிய "பகவத் கீதை" யில் இத்தகைய உதவி எனக்குக் கிடைத்தது. நீராதென்றால் தான் தத்துவசாஸ்திரி என்ற பிராணியாக இருக்க சம்மதிப்பேன். நன்கு வாழ்ந்தால் போதும். இந்த வாழ்க்கைக் காரணத்துக்காகப் பொய்களைப் புதிதாய்க் கற்பிக்கவேண்டாம் என்று ஜார்ஜ் எலியட் கூறியுள்ளாள்; என் அபிப்பிராயமும் அப்படியே.[1] "கடமையைக் கைப்பிடி! பலத்தைச் சற்றும் இச்சியாது உதாஸீனனாய் இரு" என்று கீதையில் ஒரு புறம் சொல்லப்பட்டிருக்கிறது. இதுதான் மனசாந்தியை நிச்சயமாய் அடையும் விதம் என்று உணர்ந்தேன் "தேயவிகசபை" "தியேசாபிகல்" சபையின் புஸ்தகங்களையும் நான்வாசித்தேன். அநேகமாய் அவைகளினின்றே, "மறுபிறப்பு" "கர்மம்" என்ற கொள்கைகளின் உண்மையில், இவ்வித விஷயங்களில் எவ்வளவு நம்பிக்கை ஏற்படக் கூடுமோ அவ்வளவு நம்பிக்கை ஏற்பட்டது. இப்படி, பக்தி எனக்கு அதிகரித்ததாலோ அல்லது ஒருக்கால் என்புத்திக் கூர்மை மழுங்கியதாலோ, எவ்வாறாயினும், இவைகளின் பலனாய் என்மனம் ஓயாத சலனத்தை விட்டு அதிக சாந்தியை அடைந்தது. பிறகு, அந்தப் பிரயாணத்தில் போன போதைக்காட்டிலும் நல்லவனையும் கெட்டிக்காரனாகவும் திரும்பி, என் வேலையைச் செய்யத்தொடங்கினேன். எப்படி நடந்து கொள்ளுவது என்று

(1) எனது நண்பன் தான் மேன்மேலும் மதவிஷயமாய் விசாரணை செய்து படித்ததையும் அதின்படி பயிற்சி செய்ததையும் எல்லாம் விவரித்து எழுதாமல் விட்டதால், பிற்காலத்தில் ஒருபெரிய அநுபவ வேதாந்தியாயும் யோகியாயும் விளங்கினன் என்பதையும், சிலர் இளம் வயதில் அவன் இறந்ததற்குக் காரணம் அவன் செய்த யோகாப்பியாசம் என்று அபிப்பிராயப் பட்டதையும் மட்டும் இங்கே எடுத்தெழுதி நிறுத்தி விடுகிறேன்.

வ்யக்தமாய் எடுத்துச் சொல்லுவதைவிட, அதின்படி பிரதி தினம் நடந்து கொள்வது அதிகக்கடின மென்பது ஆச்சரிய மல்லவே. ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் சந்தேகங்களும் விசாரங்களும் தடுத்து நின்றன. பலகால மாய் ஊன்றியிருந்த பழக்கவழக்கங்களும் ஆசைகளின் ஆவேசமும் எதிர்ப்புறமாய் என்னை இழுத்துப் பின்வாங்கச் செய்தன. ஆனாலும் ஒவ்வொரு இடையூற்றை வென்றபோதும் ஒவ்வொரு ஆசையை அடக்கி யாண்டபோதும் மனோ தைரியம் அதிகம் பலப்பட்டு, தன் நம்பிக்கை வளரவே, மனச் சாக்ஷியின் தூண்டுதல்களும் அதிக பலம் கொண்டு, நிஸ்ஸந்தேகமாய் விளங்கின படிப்பாளியை விடினும் என் மனைவியைப்போன்ற சாதுக்களின் குழப்பமில்லா வாழ்க்கையும் எனக்குச் சிறந்த உதாரணங்களாக விளங்கின. நாம் யாதொரு குற்றமும் குறையுமற்று முதிர்ந்து களங்கமற்று இருக்கின்றோம் என்று எண்ணுமட்டும் தான், நாம் முன்னுக்கு வருவதில்லை. நம்முடைய குறைகளை உணர்ந்து அவைகளைத் திருத்தவேண்டு மென்ற அவா மனத்தில் உதித்தால், பின் நாம் எதிர்பாராத விதமெல்லாம் உதவி பெறுகிறோம். நாம் நடக்கவேண்டிய வழியும் சுகமாகப் பிரயாஸ மின்றிச் செல்லத் தக்கதாகின்றது.

ஐக்கிய நாணயச் சங்கமும், அதன் கடமையும்.

The Co-operative Banking Union

———

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தலைத் தமிழ்ப் பண்டிதர்
ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராம ஐயர் எழுதியது.

இங்கு 'ஐக்கிய நாணயச் சங்கம்' என்றது ஏழை ஜனங்கள் ஒன்று சேர்ந்து தங்கள் தங்களது பொருளாதார நிலைமையை விருத்தி செய்துகொள்வதற்குத் துணையாகும் பொருட்டு ஸ்தாபித்துக்கொண்ட கொடுக்கல் வாங்கல் சங்கங்களைக் குறிக்கும்.

இத்தகைய சங்கங்கள் நமது இந்தியாபோன்ற விவசாயத்தையே முதன்மையாகக்கொண்ட நாடுகளுக்குப் பெரிதும் இன்றியமையாதன. உலகத்தில், 'விவசாயிகளே பிற தொழிலாளரைக் காட்டிலும் பெருமை வாய்ந்தவர்' என்று கருதப்பட்டாலும், பொருளாதார நிலைமையில் 'அவர்களே தாங்கமுடியாத துன்பத்தை அனுபவித்து வருகிறார்கள்' என்பது சிறிதும் தவறாகாது. வேறு பல துறைகளிலும் முயன்று பாடுபட்டுத் தங்கள் தங்களது நன்மைக்குமட்டும் பொருள்தேடிச் சேர்த்துக் கொள்பவர்க்கும் இந்த விவசாயிகள் தாங்கள் அரும்பாடுபட்டு விளைவிக்கும் தானியங்களைக் கொடுத்து உண்டு உயிர்வாழ்ந்திருக்கச் செய்துவருவதை அறியாதார் யாவர்? இங்கே சிலர், 'பணத்தைக் கொடுத்தல்லவோ விவசாயிகளிடமிருந்து உணவுப்பொருள் பெற்றுக் கொள்ளப்படுகிறது!' என்று கூறலாம். அஃது ஒருவகையில் உண்மையே. எனினும், 'கோடிக் கணக்கானவர்கள்

சும்மா இருக்க ஒரு பகுதியினரே விவசாயத்தைக் கைக் கொண்டு எல்லோர்க்கும் உணவளித்து வரவேண்டும்' என்பது தேசக்ஷேமத்துக்கு நன்மையைத் தருவதாகாது.

இத்தகைய விவசாயிகளோ இயல்பாகவே பிறரிடம் எளிதிற் கடன்படும் நிலைமையிலிருக்கிறார்கள். பொருளாளரோ சமயம்பார்த்து விவசாயிகளைக் கடன்காரர்களாக்கித் தங்களிடம் அவர்களை அடிமைப்படுத்திக் கொள்ளப்பார்க்கிறார்கள். இஃது எல்லா நாட்டுக்கும் ஒத்ததே. முதலாளி என்பது எந்த நாட்டுக்கும் பொதுத்தானே. இம்மாதிரியான தொல்லைகள் விவசாயிகளை அணுகாதிருக்கும்பொருட்டு ஜர்மானியில் 'ரைபீஸன்', 'ஷூல்ஸ் டெலிட்ஸ்' என்னும் பெரியார் இருவர் தத்தம் மனத்துக்கேற்ப நன்மையெனத் தோன்றிய முறையில் பொது ஜனங்களது நன்மையையே கூறிக் கொண்டு பல ஐக்கியச் சங்கங்களை ஸ்தாபித்தனர். அங்கே அவற்றிற்கு 'மிகுத்துக் கொடுக்கவும், கடன் கொடுக்கவும் உதவிபுரியும் சங்கங்கள்' என்பது பெயர். அவற்றால், அத்தேசத்தினர் பெரிதும் நன்மையைப் பெற்றுவருகின்றனர். நிற்க,

இங்ஙனம், மேல்நாடுகளில் இம்முறை பரவிவர, இந்திய அரசாங்கத்தார் 'நமது இந்திய விவசாயிகளுக்கும் அத்தகைய நன்மையைச் செய்யவேண்டும்' எனக் கருதிப் பலதேசங்களுக்கும் பிரதிநிதிகளை அனுப்பி ஆங்காங்கு நடைபெறும் முறைகளின் தத்துவங்களை ஆராய்ந்து அறிந்து வரச்செய்து, சட்டத்தைச் செய்திருக்கின்றனர்; அதன்படி ஆங்காங்கு பல சங்கங்களை ஸ்தாபித்துப் பதிவு செய்தும் இருக்கின்றனர். அவற்றால் ஓரளவு சிற்சில இடங்களிற் சிலருக்கு நன்மையுங் கிடைத்திருக்கலாம். ஆனால் மேல் நாடுகளில் அச்சங்கங்கள், விவசாயிகளுக்கும் பொது

ஜனங்களுக்கும் செய்துவரும் அவ்வளவு நன்மையை, நமது தேசத்தில் இச்சங்கங்கள் செய்ய இயலாதனவாயிருக்கின்றன. இதற்குக் காரணம் நமது நாட்டில் சங்கம் ஸ்தாபிக்கப்படுங் காலத்திலேயே அதன் அடிப் படையான தத்துவம் தவறாகக் கொள்ளப்படுகின்றதே யாம். உதாரணமாக, நாம் ஒரு கிராம ஐக்கிய நாணயச் சங்கக் காரியதரிசியைக் காண நேர்ந்ததாக வைத்துக் கொள்வோம். கண்டதும், நமக்கு ஐக்கிய முறையில் விசேஷப் பற்றும் நம்பிக்கையும் இருக்கின்றமையால், அவரைப் பார்த்து "ஐயா, உங்களது சங்கம் இப்பொழுது எந்நிலைமையில் இருக்கின்றது?" என்று கேட்கிறோம். உடனே அப் பெரியார் சிறிதும் தடையின்றி, நம்மை நோக்கி "ஐயா சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டில் இத்தனை ஆயிரம் ரூபாய் அதிகமாகச் சென்டிரல் பாங்கிலிருந்து கடன்வாங்கி அங்கத்தினர்களுக்குக் கடன்கொடுத்திருக்கிறோம்" என்று கம்பீரமாக மறுமொழி கூறுகிறார். இம்முறையால் ஏழை ஜனங்களுக்கு நன்மையா தீமையா என்பது நன்கு கவனிக்கத்தக்கது. ஒரு கிராமத்தார் முதல் வருஷத்திலே பத்தாயிர ரூபாய்க் கடன்காராயிருந்து அடுத்த வருஷத்தில் இருபதாயிர ரூபாய்க் கடன்காரரானால் அஃது அந்த கிராமத்தின் செல்வக் குறைவைக் காட்டுமா? அல்லது செல்வப் பெருக்கைக் காட்டுமா? நேயர்களே ஊகித்துக் கொள்ளலாம். அன்றியும், இங்ஙனம் கூறிய காரியதரிசியாரோ ஐக்கிய முறையில் விசேஷ அனுபவம் வாய்ந்தவராகக் கருதப்படுபவர். மீட்டும் அவரைப் பார்த்து "ஐயா, சென்ற வருஷத்தைக் காட்டிலும் இந்த வருஷத்தில் அதிகம் கடன் வாங்கிக் கொடுத்திருக்கிறோம், என்று பெருமை பேசுகிறீரே; கடனாளியாக்குவது ஏழைகளைத் தீமைக்கு உட்படுத்து

வதாகாதா ?" என்று கேட்டால், அவர் தற்கால முறைப்படி பெரிதும் அநுபவம் வாய்ந்தவரெனக் கொண்டாடப் படு கிறவர் ஆதலின், அதற்கும் சிறிதும் தடையின்றி நம்மை நோக்கி "ஐயா, என்ன நீங்கள் சட்டத்தையும், துரைத்தன த்தார் கருத்தையும் அறியாது வினவுகிறீர்கள்; அதிகமாகக் கடன் வாங்கி அங்கத்தினர்களுக்குக் கடன் கொடுத்திருக் கிற சங்கங்களைத் தானே மேல் அதிகாரிகள் பெரிதும் கொண் டாடுகிறார்கள்; அவற்றிற்குத்தானே நல்ல வேலை செய்ததாக நற்சாட்சிப் பத்திரங்களை அளிக்கிறார்கள்." என்று விடை யளிக்கிறார். பாருங்கள் விந்தையை! இது குதிரை தூக்கிப் போட்டதுமன்றிக் குழியையும் பறித்ததாம்' என்ற கதை போலிருக்கவில்லையா ? இவற்றால் அங்கத்தினர்களுக்குக் கடன் கொடுப்பதும், அவர்களைக் கடனாளியாக்குவதுமே அடிப்படைக்கொள்கையாகவும், செய்கையாகவும் கருதப் படுகின்றன என்பது புலப்படவில்லையா ? இதுதான் நமது நாட்டிலே தற்காலம் நடைபெற்றுவரும் ஐக்கிய நாணயச் சங்க முறையிலே உள்ள அடிப்படைத்தத்துவத்தின் தவ றுகும். இந்த ஒரு காரணம் பற்றியேதான் சில தந்நலத்தி யாகிகளும், பொது நலப்பிரியர்களும் 'ஷுல்ஸ்டெலிட்ஸ்' என்பார் கண்ட முறையைப் பின் பற்றுவதைக் காட்டிலும் 'ரைபீஸன்' என்பார் கண்ட முறையைப் பின் பற்றுவது ஏழை ஜனங்களுக்குப் பெரிதும் நன்மையைத் தரக்கூடிய தாகும் என்கிறார்கள். கடனாளியாவது தீமையைத் தரக் கூடியது என்பதை நன்கு அறிந்திருந்தும், பலரையும் அவசியமானது கடன் படச்செய்கின்றது என்பதை மறுப் பார் யாரும் இல்லை. எனினும், எதற்கும் ஓர் அளவு உண் டல்லவா? எப்பொழுதுமே 'இலகுவில் கிடைக்கின்றது' என்ற காரணத்தைக்கொண்டு கடன் வாங்கிக்கொண்டே வாழ்ந்து

வந்தால் என்றுதான் கடன் காரராகாதிருப்பது ? முதலாளியாக முடியாவிட்டாலும்,—ஏன் முடியாது, ரைபீஸன் முறையைப் பின்பற்றினால் தவறாமல் முதலாளியாகலாம்,—கடனாளியாகவாவது ஆகாமல் இருக்கவேண்டாமா ? 'கள் குடித்தல் தீமைசெய்யக்கூடியது' என்று பிரசங்கஞ்செய்து கொண்டு ஆங்காங்கு கள்ளுக்கடைகள் வைப்பதை வளர்த்துக்கொண்டு வந்தால் எங்ஙனம் கள் குடி நீங்கும் ? அது போலல்லவோ 'கடன் படுவது தீமை செய்யக்கூடியது' என்று பிரசங்கஞ்செய்துகொண்டும், 'கடன் படாது அங்கத்தினர்களைக் காப்போம்' என்று விதி ஏற்படுத்திக் கொண்டும் நடத்திவருகிற ஐக்கிய நாணயச்சங்கங்களில் அங்கத்தினர்களைக் கடன் காரர்களாக்குவதும் ஆகும்! இவ்வளவும் கூறியதனால் தற்காலம் நமது நாட்டில் நடைபெற்று வரும் ஐக்கிய நாணயச்சங்கங்கள் நன்மை செய்யும் நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்டனவாயினும் அனுஷ்டானத்தில் தவறான அடிப்படையுடனேயே நடத்தப்பட்டுவருகின்றன என்பது நன்கு புலனாகும்.

இனி, இவற்றை எத்தகைய அடிப்படையுடன் நடத்துவது ஏழை ஜனங்களுக்கு நன்மையைச் செய்யக் கூடியதும் என்று குறிப்பிடுவது பொருத்தமானது. அது முதலில் ஒவ்வொரு சங்கமும் "இச்சங்கம், ஏழைகள் தங்களது பொருளைச் சிரமமின்றி மிகுத்துவருதற்குத் துணைசெய்வது; அங்கத்தினர்களுக்குக் கடன் கொடுப்பது ஒன்றையே தனது கடமையாகக் கொண்டதன்று. ஆனால், கடன் வாங்குவதை இரண்டாவதாகவும் இயன்றவரை மிகுத்து வருவதை முதலாவதாகவும் கொள்ளவேண்டுமென அங்கத்தினர்களுக்குப் போதித்து அவர்களை அவ்வழியிலே பழக்கிவர விரும்புவது" என்ற அடிப்படையான தத்துவத்தை விள

க்கி அங்கத்தினர்களுக்கு அறிவித்து, அத்தத்துவத்திற் சிறிதும் பிறழாது நடைபெற்று வரல் வேண்டும் என்பது. இங்ஙனம் கூறியதனுல் எவரும் இலகுவில் பெரும் பொருளை மிகுத்து விடலாம் என்பது கருத்தன்று. சொல்லுதல் எளிது; செய்தல் எளியதன்று. அவரவர் நிலைமைக்குத் தக்கவாறு தான் மிகுக்க முடியும். ஆனுல் வேறு வழியில் மிகுக்க முடியாததும், அலட்சியமாகக் கருதப்பட்டுச் செலவாகி விடுவதும் ஆகிய மிகச் சிறிய தொகையைக் கொண்டே ஒரு பெரிய தொகையைக் குறித்த காலத்தில் எதிர்பாராத நிலைமையில் ஏழைகள் மிகுத்துக்கொள்ள இச்சங்கம் துணை செய்யத்தக்கது என்பது தவறாகாது. அதனோடு எவர்க்கும் பொருளின் அருமைபெருமையை விளக்கி எல்லோரையும் மிகுக்கப் பழக்கிவருவது என்பதும் தவறாகாது. மதுரை, இராமநாதபுரம் ஜில்லா, கோவாபரேடிவ் சென்டிரல் பாங்கில் தற்காலம் ஒரு புது விதிசெய்து கையாண்டு வருவதும் கவனிக்கத் தக்கது. இங்ஙனம் ஐக்கிய நாணயச்சங்கங்களின் வழியாக மிகுத்துவைக்கும் முறையைப் பின்பற்றுவோர் பிற கம்பனிகளில் இன்ஷ்யூரென்ஸ் முதலிய செய்து மிகுத்து வைப்பதால் அடையும் நன்மையைக் காட்டிலும் விசேஷ நன்மையை அடைவார் என்பதும் ஆராய்ந்தறியத் தக்கது. நாளை வரும் பலாக்காயிலும் இன்றுவரும் களாக்காய் நல்லது. அன்றியும், இறந்தபின் எவருக்கோ கிடைக்கலாம் என்பதற்காக உயிருள்ளளவும் ஒருவன் பிறருக்கு ஆட்பட்டுத்தான் தேடிய பொருளைக் கொட்டிக் கொடுக்கலாமா? தொண்ணூற்றென்பது பேர் உயிருடனிருந்து, நமக்குச் சீக்கிரத்திலே சாவுவந்து, நமது சந்ததிகள் பெரும் பொருளாளராக வேண்டுமென்று பார்ப்பது அறிவுடைமை யாகுமா? அல்லது நியாயந்தான் ஆகுமா? நாம் நினைத்தபடியே எல்லாம்

நடை பெறும் என்பதும் நிச்சயமல்லவே! இவற்றால் ஐக்கிய முறை, பிற முறைகளைக் காட்டிலும் நியாயவழியில் மிகுத்துக் கொடுக்கக் கூடியது என்பது நன்கு அறியத் தக்கதாம். இங்ஙனம் நடத்துவதில் சிரமம் ஏது மில்லை. முதலில் சிறிது துன்பம்போல் தோன்றும். நாளடைவில் அங்கத்தினர்களிடம் சிக்கனம், நாணயம், நம்பிக்கை, ஒற்றுமை, உணர்ச்சி, பிறர்க்கு உபகாரம் செய்யும் குணம், ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்வதே உயர்வான பிழைக்கும் வழியாகும் என்பது, 'தம்மைத்தாமே முன்னேற்றிக் கொள்ள முடியுமே அன்றிப் பிறர் தம்மை முன்னேற்ற முடியாது; முன்னேற்றவும் உண்மையாக முற்படார்' என்பதில் நம்பிக்கை, உறுதியுடைமை முதலிய சிறந்த குணங்களும் செயல்களும் வளரும். அவ்வளர் நிலையைக் கண்டதும் அதுவரை விலகி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த முதலாளிகள் "இனித் தாங்கள் முன் போலக் கொள்ளை வட்டியையும், அடிமைக்கு ஆளையும் இஷ்டம் போலப் பெற முடியாது; இன்னும் சிறிது காலம் தாமதித்தால் தற்காலம் தங்களுக்கிருந்துவரும் சிறிது பெருமையும் குறைந்து விடும்." என்பதை உணர்ந்து இத்தகைய ஐக்கிய நாணயச் சங்கங்களிற் சேர்ந்தே ஆகவேண்டி வரும். அப்பொழுதும் அங்கத்தினர்கள் தங்களுடைய கோட்பாடுகளிலும், அடிப்படையான தத்துவத்தைக் கைக் கொள்வதிலும் நன்கு பழகி இன்பமுற்றதனால், சிறிதும் நழுவமாட்டார்கள். சில முதலாளிகள் பாங்கில் நடைபெறுவது போல் இத்தகைய சங்கங்களில், முதற்போட்ட காரணத்திற்காக, எவருக்கும் அதிக வாக்குக் கிடையாது. எல்லார்க்கும் தனித்தனி ஒரு 'வோட்' தான் என்பதும் கவனிக்கத்தக்கது. அக்கால், அந்த முதலாளிகளின் முதலும், ஏனைய அங்கத்தினர்களது மிகுதியும் சங்கத்திற்கு மூலதனங்களாகின்றன. கடன் வாங்குவோர் அதிக

பிரார். ஆகையினாலே அம்முதலைக்கொண்டு அவ்வவ்விடத்திற்கேற்ற துறையில் பல தொழில்களை நடத்திவர இடங்கொடுக்கும். ஐக்கியமுறையில் ஒரு தொழிலை நடத்துவது, தனித்த முதலாளிகள் ஒரு தொழிலை நடத்துவது போலல்லாமல், சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தினர் அனைவர்க்கும் சமமாக நன்மையைச் செய்வதோடு, சேராதவர்க்கும் ஓரளவு நன்மையைச் செய்யும் என்பது பிரசித்தமானது; அவர்களே தொழிலாளிகளாகவும், முதலாளிகளாகவும் இருக்கின்றார்களாதலின், இத்தகைய நிலைமை ஏற்படுவததான் ஒரு தேசத்தின் பொருளாதார நிலைமை உயர்ந்திருக்கிறது என்பதற்கு அத்தாட்சியாகும். அந்த நிலைமைதான் ராஜியவாழ்க்கைக்கும் உற்ற பெருந்துணை செய்வதுமாகும் இங்கே, சில சுயநலப் பிரியர்கள் "எதைப்பற்றியும் அப்படிச்செய்யலாம் ; இப்படிச் செய்யலாம் என்று சொல்லலாம். அவை ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவமாட்டா" என்று கூறி நமது கொள்கையை மறுக்கலாம். இதற்கு நாம் அவர்க்கு அதிகம் கூற வேண்டியதில்லை. "நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை;" "முயன்றால் முடியாததொன்றில்லை" என்றுள்ள பழமொழிகளை நினைப்பூட்டுவதே போதுமானதாம். இவ்வளவும் கூறியதனால் எங்ஙனம் நடைபெறின் ஐக்கிய நாணய முறை நமது நாட்டார்க்குப் பெரிதும் நன்மையைச் செய்வதாகும் என்பது ஒருவகையிற் புலனாம்.

ஆதலின், சகோதரர்களே, இந்த ஐக்கிய நாணயச்சங்கத்திற் சேராதிருந்தாற் சேருங்கள். சேர்ந்திருந்தால் மேற்கூறிய அடிப்படையான தத்துவத்தைக் கடைப்பிடித்து நடந்து உங்களுக்கும் உங்கள் தேசத்துக்கும் நன்மையைச் செய்து பொருளாதார நிலைமையையும், பிறசுரங்களையும் உயர்த்திக்கொள்ளுங்கள்.

கூட்டுறவு முறையின் குணம்.

(ஆனந்தக்களிப்பு.)

1. நல்ல மருந்திது காணீர் ;—நம்தம்
நாடிவ் வறுமைப் பிணிதொலைத் தோங்க
நல்ல மருந்திது காணீர்.

2. ஏழைக் கெளியது காணீர் ;—மற்றும்
எல்லவ ருக்கும் இனியது காணீர். (நல்ல)

3. ஒற்றுமைக் குற்றது காணீர்;—உள்ள
ஒவ்வொரு வர்க்கும் உரியது காணீர். (நல்ல)

4. கூறும் அதன் குணம் காணீர்;—அன்பாய்க்
கூடிற் சமபலன் கூடிடும் காணீர். (நல்ல)

5. தேர்ந்த சுதந்தரம் காணீர் ;—இதிற்
சேர்ந்தவர்க் காக்கம் செழித்திடும் காணீர். (நல்ல)

6. முதலின்றி மிகுதியாம் காணீர் ;—இதை
முற்றுங் கைக்கொண்டால் முதலாகும் காணீர். (நல்ல)

7. கடனைக் காணுத்து காணீர் ;—எந்தக்
கடனையும் போக்கிக் களிப்பது காணீர். (நல்ல)

8. முதலாளி யேஇல்லை காணீர் ;—இந்த
முறைபயின் றூரே முதலாளி காணீர். (நல்ல)

9. தொழிலாளி யும் இல்லை காணீர் ;—இந்தத்
தூய முறையே தொழில் முறை காணீர். (நல்ல)

10. அடிமைப் பெயரில்லை காணீர் ;—இதில்
அண்டினர் யாரும் அரசர்காண் காணீர். (நல்ல)

11. மனைக்காம் பலபொருள் காணீர் ;—அவை
வாங்கி வரவே வரும்பலன் காணீர். (நல்ல)

12. போகப் பொருள் இவை காணீர் ;—அவை
புவியிலு ளோர்க்குப் பொதுப்பொருள் காணீர். (நல்ல)

13. அன்பென்ப தொன்றுண்டு காணீர் ;—இந்த
அவனியுள் ளோர்க்கரு ளேபொருள் காணீர். (நல்ல)

14. நானில்லை எனதில்லை காணீர் ;—அன்றி
நீயில்லை உனதில்லை என்பதும் காணீர். (நல்ல)

15. நாமென்ப தொன்றுண்டு காணீர் ;—மற்றும்
நமதே அனைத்தென்றும் நாட்டுக்கும் காணீர். (நல்ல)

16. காணீர் அதன் பெயர் காணீர் ;—நல்ல
கற்பகக் கூட்டுமளிகையாம் காணீர்.

நல்ல மருந்திது காணீர் ;—நம்தம்
நாடிவ் வறுமைப்பிணி தொலைத் தோங்க
நல்ல மருந்திது காணீர்.

உவ. சா. வே.

தமிழ்ச் செல்வம்.

Tamil Classics.

பிரிவாற்றாமை.

(1) "செல்லாமை உண்டேல் எனக்குரை ; மற்று நின்
வல்வரவு வாழ்வார்க் குரை."

(2) தொடிற் சுடின் அல்லது, காமநோய் போல
விடிற் சுடல் ஆற்றுமோ தீ !"—திருக்குறள்.

இவ்விரண்டனுள் முதலாவது, 'சிறிது காலம் நீங்கிப் பிரிந்து போய் விரைவில் திரும்பி வருவேன்' என்று கூறிய நாயகனுக்கு, நாயகியின் தோழி கூறியதென்பர். அதன் பொருள் : 'நீ எம்மைப் பிரியாமை யுண்டாயின் அதை எனக்குச் சொல் ; அஃதன்றி, பிரிந்துபோய் விரைந்து வருதலைச் சொல்வையாயின், அதனை, அப்பொழுது (நீ மீண்டு வரும் காலத்து) உயிர் வாழ்வார்க்குச் சொல்,' என்பது. இதனால், 'நின்னைப் பிரிந்து உயிர்தரியாள் ; நீவருமுன் தலைவி இறந்துபடுவள்' என்பதை வெளியிட்டாள் ; எனவே, அவர்கள் காதலின் சிறப்பும், பிரிவின் ஆற்றரிய கொடுமையும் துலங்குகிற்று.

இரண்டாவது செய்யுள், காமத்தின் கொடுந்தன்மையை விளக்கித் தலைவி தோழிக்குக் கூறியதென்பர். இதன் பொருள் : 'தீ, தன்னைத் தொட்டால் மட்டும் சில வேளை சுடும் ; அவ்வாறின்றித் தன்னை அகன்று நீங்கினரையும் சுடும் வன்மை, காமத்துக்கிருப்பதுபோல், தீக்கு இல்லை

என்பது ; எனவே, காமம் தீயினும் மிகக்கொடியது என்பதாயிற்று ; அத்தகைய காமத்தின் கொடுமையை யான் எங்ஙனம் பொறுப்பேன் என்கின்றாள் தலைவி. இச்செய்யுளில், தீ 'சுடின்' அதாவது தீ 'சுடுமாயின்' என்ற சொல்லுக்குப், பரிமேலழகர் விசேஷப் பொருள் கூறியிருக்கிறார்: அஃதாவது, தொட்டாலும் சுடாவண்ணம், மந்திரம் மருந்துகளால் தீயைக் காக்கலாம்; காமமோ, அவ்வாறு மந்திர மருந்துகளின் சக்திக்கும் உட்பட்டது அன்று; என்பது. எனவே தொடினும் தீ சிலபொழுதே சுடும்; சுடாபொழுதும் உண்டு; காமமோ, அகன்றாலும், எப்பொழுதும், சுடும் என்பது விளங்கிற்று.

மழை பெய்யச் செய்தல்
Making the Rain Pour.

அமெரிக்காவிலுள்ள சார்ல்ஸ். எம். ஹாட்பீல்ட் என்பவருக்கு "மழைக்காரர்" என்று பெயர். அவர் இருபத்தைந்து வருஷங்களாக வேண்டிய இடங்களிலெல்லாம் மழையை உண்டு பண்ணி வந்திருக்கிறாராம். பொன் விளையும் காலிபோர்னியா, க்லான்டைக் என்னுமிடங்களில் பயிருக்காகவும் பொற் கனி வேலைக்காகவும் தேவையாயிருந்த நீரானது அங்கு இல்லாது போகவே மழையைக் கொணர்ந்து ஏரிகளைப் பெருக்கவேண்டுமென்று இவரோடு அங்குள்ளோர் ஒப்பந்தம் பேச அந்த ஒப்பந்தப்படி இவர் மழையை உண்டாக்கினராம். வேறு அனேக இடங்கள் மழையில்லாது வறண்டுபோய் பயிர்கள் கரிந்து கால் நடைகளும் குடிக்க நீரில்லாது தின்கப் புல்லில்லாது ஆயிரக்கணக்காய் மடியும்போது இவர் மூன்று நாளில் மழையை உண்டாக்கி நாடெங்கும் சுபிக்ஷமாகச் செய்தனராம்.

இயற்கையில் காற்றிலுள்ள நீரானது ஓரளவுக்கு அதிகப்பட்டுக் குளிரும் போது மழையுண்டாகின்றதென்பது யாவரும் அறிந்த விஷயம்.* இரசாயனப் பொருள்களைக் கொண்டு செயற்கையால் மழைக்கு வேண்டிய சாதகங்களை இயற்றினல் மழை உண்டாகும். இன்ன பொருள்களை உபயோகித்தால் வேண்டிய சௌகரியங்கள் அமையும் என்

---

* தமிழ்நேசன் V-ம் தொகுதியில் 85-93-ம் பக்கங்களைப் பார்க்கவும்

பதையும் அவற்றைக் குறிப்பிட்ட இன்னவகையாய் உபயோகிக்கவேண்டும் என்பதையும் ஹால்ட்பீல்ட் மிகவும் ரகசியமாக வைத்திருக்கிறார். சமீபத்தில் இதை அமெரிக்கா, பிரிட்டன் முதலிய அரசாங்கங்களுக்கு விற்கத் தயாராயிருப்பாராம்.

அவர் மழை உண்டாக்க உபயோகிக்கும் கருவிகள் கோபுரங்களைப் போலிருக்கின்றன. அவை சுமார் இருபத்தினான்கடி உயரமிருக்கின்றன. இடத்துக்குத் தக்கபடி ஒன்று அல்லது இரண்டு மூன்று கோபுரங்கள் கட்டவேண்டியிருக்கும். (அவற்றின் மீது பெரிய தட்டுக்களில் ஏதோ சில இரசாயனப் பொருள்கள் வைக்கப் படுகின்றன.) அவற்றின் சக்தியால் மழை உண்டாகிறது. இந்தக் கோபுரங்கள் பொதுவாக ஒரு குளம் அல்லது ஏரி, அல்லது வாய்க்கால் போன்ற நீர்ப்பாங்கின் பக்கமாகவே வைக்கப்படுகின்றன. அவ்வாறு வைத்து இரண்டு மூன்று நாட்களில் நல்ல மழை பெய்கிறது.

அ.